**SL. No. : CC**

ಒಟ್ಟು ಪ್ರಶೆಗಳ ಸಂಖ್ಯೆ : 47 ]
Total No. of Questions : 47 ]
**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**

**CCE RF**
**CCE RR**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
[ Total No. of Printed Pages : 8
**Code No. : 85-T**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ + ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh + Regular Repeater )**

ದಿನಾಂಕ : 12. 04. 2017 ] [ Date : 12. 04. 2017

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-30 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 47-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. ஒழுங்குமுறைச் சட்டத்தின் மிக முக்கியச் சிறப்பு

(A) அது கூட்டாட்சிக்கு வழிவகுத்தது

(B) அது சமய அடிப்படையில் தனியான வாக்காளர் தேர்தல் முறையை ஏற்படுத்தியது

(C) அது உச்சநீதிமன்றம் ஏற்பட வழிவகுத்தது

(D) மாகாணங்களில் அதிகாரத்தை பகிர்ந்தளித்தது.

2. **"அ"** பிரிவில் தலைவர்களின் பெயர்களும், **"ஆ"** பிரிவில் அவர்கள் ஆற்றிய பங்கும் தரப்பட்டுள்ளன. சரியான இணையைக் கண்டுபிடி.

| **பிரிவு - அ** | | **பிரிவு - ஆ** | |
|---|---|---|---|
| (a) | பிரான்சிஸ் பெர்டிணான்ட் | (i) | ரஷ்ய குடியரசுத் தலைவர் |
| (b) | ஹிட்லர் | (ii) | ஆஸ்திரிய நாட்டு இளவரசர் |
| (c) | முசோ னி | (iii) | ஜெர்மனியின் சர்வாதிகாரி |
| (d) | ஜோசப் ஸ்டா ன் | (iv) | இத்தா யின் சர்வாதிகாரி. |

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | iv | i |
| (B) | i | ii | iii | iv |
| (C) | iv | i | ii | iii |
| (D) | iii | iv | i | ii. |

3. ஐக்கிய நாட்டு சபையின் தலைமையகம் உள்ள இடம்

(A) பாரீஸ்

(B) ஜெனிவா

(C) வாஷிங்டன்

(D) நியூ யார்க்.

4. அமைதி பணிக்காக சர்வதேச சங்கம் ( League of Nations ) ஏற்படுத்தப்பட்டாலும் அது தோல்வியுறக் காரணம்

(A) ஐக்கிய நாட்டு சபை ஏற்படுத்தப்பட்டது

(B) 1939-ல் இரண்டாம் உலகப் போர் வெடித்தது

(C) முதல் உலகப் போர் முடிவுற்றது

(D) அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே பனிப்போர் தொடங்கியது.

5. ‘மனித குலம் யாவும் ஒன்றுதான்’ என்று அறிவித்த கன்னட கவி

(A) ரன்னா (B) பம்பா

(C) ஜன்னா (D) பொன்னா.

6. வரைபடத்தில் குறிக்கப்பட்ட சரியான இணையைக் கண்டுபிடி :




(A) 1 — துங்கபத்திரா, 2 — பக்ரா நங்கல், 3 — கோசி

(B) 1 — ஹிராகுட், 2 — கோசி, 3 — பக்ரா நங்கல்

(C) 1 — பக்ரா நங்கல், 2 — துங்கபத்திரா, 3 — ஹிராகுட்

(D) 1 — கோசி, 2 — ஹிராகுட், 3 — துங்கபத்திரா.

7. இந்தியாவி ருந்து மைக்கா (காக்காய் பொன்) ஏற்றுமதி குறைந்துள்ளது. காரணம்

(A) அதன் உற்பத்தி குறைந்துள்ளது

(B) அதன் உற்பத்தி அதிகரித்துள்ளது

(C) மைக்காவிற்குப் பதிலாக மாற்று பொருள் கிடைத்துள்ளது

(D) இது ஒரு கலவையற்ற கனிவளம் ஆகும்.

8. ‘இந்திய பொருளாதார திட்டத்தின் தந்தை’யெனப் போற்றப்படுபவர்

(A) சர் எம். விசுவேசுவரய்யா (B) நாராயண் மூர்த்தி

(C) டாக்டர் நார்மன் பார்லோக் (D) டாக்டர் பிரதாப் ரெட்டி.

9. ராமு தன் மகளின் எதிர்கால திருமணத்திற்காக பணத்தை சேமித்து வைக்க விரும்புகிறார். நீ எந்த வகை வங்கி கணக்கு முறையைத் தொடங்க ஆலோசனை கூறுவாய் ?

(A) சேமிப்பு வங்கி கணக்கு

(B) தொடர் வைப்புத் தொகை வங்கி கணக்கு

(C) நடப்பு வங்கிக் கணக்கு

(D) பருவ வைப்புத் தொகை வங்கி கணக்கு.

10. பல்வேறு நாடுகளின் உற்பத்தி பொருட்கள் இந்திய சந்தைகளில் கிடைக்கின்றன. இது எந்த முறையில் கிடைக்கிறது ?

(A) உலகமயமாக்கல் முறை (B) தொழில்மய முறை

(C) தனியார் மயமுறை (D) நகரமய முறை.

II. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வரியில் விடையளி : $14 \times 1 = 14$

11. காலச்சக்கரம் என்றால் என்ன ?

12. விடுதலை இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் யார் ?

13. சர்தார் வல்லபாய் பட்டேல் 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என ஏன் அழைக்கப்படுகிறார் ?

14. டாக்டர் டி.எம். நஞ்சுண்டப்பா குழு ஏன் அமைக்கப்பட்டது ?

15. இந்திய அயல்நாட்டுக் கொள்கை, 'நேருவின் அயல்நாட்டுக் கொள்கை' என ஏன் போற்றப்படுகிறது ?

16. மக்கள் கூட்டம் எப்போது கலவரமாக வெடிக்கிறது ?

17. சிப்கோ இயக்கம் ஏன் ஏற்படுத்தப்பட்டது ?

18. வட இந்திய சமவெளி எவ்வாறு வண்டல் மண் படிந்த பகுதியாக அமைந்துள்ளது ?

19. தாமோதர் நதி ஏன் 'வங்கத்தின் துயரம்' என அழைக்கப்படுகிறது ?

20. இந்திய மேற்கு கடற்கரையில் கடல் அரிப்பு மிக மோசமாக உள்ளது. ஏன் ?

21. கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக்காடுகளை நாம் ஏன் வளர்க்க வேண்டும் ?

22. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், 'பசுமைப் புரட்சியின் முன்னோடி' என ஏன் அழைக்கப்படுகிறார் ?

23. கிராமங்களின் முன்னேற்றமே இந்தியாவின் உண்மையான முன்னேற்றம் எனக் கூறியவர் யார் ?

24. உலகமயமாக்கல் எவ்வாறு பொருட்களின் விலையை சரிவடையச் செய்கிறது ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டி ருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளி :

15 × 2 = 30

25. இரட்டையாட்சியைப் பற்றி விவரி.

26. மும்பை கருநாடகப் பகுதிகள் யாவை ?

27. சுவாமி விவேகானந்தர் இந்திய இளைஞர்களை எவ்வாறு தூண்டியெழுப்பினார் ?

28. சீனப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?

*அல்லது*

பாசிசத்தின் கொள்கைகள் யாவை ?

29. மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

30. தீவிரவாதத்தினால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

31. வரதட்சணை ஒரு சமூக கொடுமை என்பதை விளக்குக.

32. “இந்திய விவசாயம் பருவமழையின் சூதாட்டம்” என ஏன் அழைக்கப்படுகிறது ?

33. மண் அரிப்பை தடுப்பது மிகவும் அவசியமானது. ஏன் ?

34. இந்திய வெப்பமண்டல இலையுதிர் காடுகளின் குண அம்சங்கள் யாவை ?

35. இயற்கை இடர்பாடுகளி ருந்து தற்காத்துக் கொள்ள தூர புலனுணர்வு தொழில்நுட்பம் ( Remote Sensing technology ) எவ்வாறு துணை புரிகிறது ?

36. “தற்போது இந்தியாவில் தோட்டப் பயிர்கள் விவசாயம் அதிக முன்னேற்றமடைந்துள்ளன” விவரி.

37. கிராமங்களி ருந்து நகர்ப்புறங்களுக்கு மனிதர்கள் குடிபெயருவதால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

38. தேசிய வருமானத்தின் மூலம் ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளவிடும் முறை சரியானதல்ல. ஏன் ?

39. ‘தொழில் முனைப்புடைமை என்பது ஒரு படைக்கும் திறனாகும்.’ விளக்குக.

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு வாக்கியங்களில் விடை தருக : $6 \times 3 = 18$

40. "கி.பி. 1857இல் நடைபெற்ற பெரும் புரட்சிக்கு பலவிதமான பொருளாதார மாற்றங்களே காரணமாக இருந்தன" நியாயப்படுத்துக.

*அல்லது*

போக்குவரத்து, தகவல்தொடர்பு மற்றும் பத்திரிக்கை துறை வளர்ச்சி ஆகியன எவ்வாறு இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு வழிவகுத்தன ?

41. தற்போதைய உலகிற்கு மிகவும் அவசியமான ஆயுத குறைப்பில் இந்தியா ஏன் முன்னோடியாகத் திகழ்கிறது ?

*அல்லது*

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிடையே சுமூக உறவு நிலவுகிறது. நியாயப்படுத்துக.

42. தீண்டாமையை அடியோடு ஒழிக்க அரசியலமைப்பு சட்டரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

43. இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள் யாவை ?

*அல்லது*

இந்தியாவின் முக்கிய தொழில் மண்டலங்கள் யாவை ?

44. காந்தியடிகளின் கிராமங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளித்தல் என்ற சமத்துவ கொள்கையை விவரி.

*அல்லது*

பொதுமக்களின் நிதி மற்றும் தனிமனித நிதி ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளை எழுதுக.

45. "அஞ்சல் அலுவலகங்கள் கூட பல்வேறு பண பரிவர்த்தனை பணிகளை ஆற்றுகிறது." நியாயப்படுத்துக.

*அல்லது*

ஆயுள் உயிர்காப்புறுதி ஆவணத்தின் ( insurance ) முக்கியத்துவம் பற்றி எழுதுக.

V. பின்வரும் வினாவிற்கு எட்டி   ருந்து பத்து வாக்கியங்கள் வரை விடை தருக : 4

46. இந்திய விடுதலைப் போராட்டத்தில் மிதவாதிகள் ஆற்றிய பங்கு குறித்து விளக்குக.

VI. 47. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வருமிடங்களைக் குறிக்கவும் : 1 + 3 = 4

a) பாம்பே ஹை

b) கொங்கண கடற்கரை

c) பெங்களூரு.

**பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கான மாற்று வினா : (வினா எண் 47க்கு மாற்று வினா)**

இந்தியர் வாழ்வில் இமயமலையினால் ஏற்படும் பயன்கள் யாவை ? 4